வழங்கப்பட்டு விட்டது; நேற்று வரை நிலுவையின்றி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகக் கூறினார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளின் மேல் அக்கறை கொண்ட அரசு. என்னுடைய மதுரை மாவட்டத்திலே ஒரே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருந்தது. அங்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு இதுவரை பணம் ஒன்றும் கிடைக்கவில்லை. அந்த மில்லும் ஓடவில்லை. அந்த மில்லை ஓட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கரும்பு விவசாயிகளுக்கும் நிலுவையின்றிப் பணம் வழங்கப்பட்டு விட்டது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். அந்தச் சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கியதால் அது மூடப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

13–

கிராபைட் தொழிற்சாலை

***22523–திரு. வீ. சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சிவகங்கை, கோமாளிப்பட்டி கிராபைட் தொழிற்சாலைக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்து சீரமைக்க அரசு முன்வருமா?

2004 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கனிம நிறுவனம் போதிய நிதி ஒதுக்கீடு செய்து சிவகங்கை, கோமாளிப்பட்டி கிராபைட் தொழிற்சாலையைச் சீரமைத்து செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கைச் சீமை, வீரம் விளைந்த பூமி. சிவகங்கைச் சீமையை ஆண்ட வீரமங்கை வேலு நாச்சியாரின் மறு உருவமாகத் திகழ்ந்து கொண்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். வீரம் விளைந்த பூமியான சிவகங்கை, கோமாளிப்பட்டியில், 'இரும்பு வைரம்' என்று அழைக்கப்படும் கிராபைட் கிடைத்து வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் கனிம வளர்ச்சியில் எந்த ஒரு முயற்சியும் இல்லாமல் கிடப்பில் கிடந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில் 30 கோடி ரூபாய் கிராபைட் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு, அந்தத் திட்டம் வளர்ச்சி அடைந்து வருகிறது. கிராபைட்டிலிருந்து பொதுவாக, பெரும் அளவில் வெப்பம் தாங்கும் சூளைக் கற்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வேகத் தடைகளுக்கான பிரேக் தயாரிக்கப்பட்டு வருகிறது. கரிக்குச்சி, பென்சில் போன்றவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை கொண்டு, எனது தொகுதியில் கிராபைட்டைத் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்கித் தர நமது அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான, கோமாளிப்பட்டியிலுள்ள சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையைத் திறமையாகவும், இலாபகரமாகவும் நடத்த, பெங்களூரிலுள்ள ஐ.பி.எம். மற்றும் ஹைதராபாத்திலுள்ள ஏ.ஆர்.சி. இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டு, அந்த ஆய்வு அறிக்கைகளை ஆராய்ந்து, புவனேஸ்வரிலுள்ள ஆர்.ஆர்.எல். நிறுவனம் அளித்த பரிந்துரையின்படி, கூடுதலாக ஒரு மிதவை இயந்திரம் பொருத்தப்பட்டு, கிராபைட் உற்பத்திச் செயல் திறன் அதிகரிக்கப்பட்டதோடு, சந்தையில் எதிர்பார்க்கப்படும் அளவிற்குத்

தரமிக்க கிராபைட் துகள்கள் 2002 முதல் உற்பத்தி செய்யப்படுகின்றன. சென்ற 2002–2003 ஆம் ஆண்டு மட்டும் 4830 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, 4625 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட கிராபைட் துகள்களின் மதிப்பு ரூ.6.18 கோடியாகும். 2002–2003 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை முதல் முறையாக ரூ.116 இலட்சம் ரொக்க இலாபமும், ரூ.5 இலட்சம் நிகர இலாபமும் ஈட்டி, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஆர். இராமசாமி.

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, நமது முதலமைச்சர் அவர்களால் இந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகியும், இன்னும் அதனுடைய பிற தொழில்களை அங்கே அமைக்காமல், கிராபைட்டை சுத்தம் பண்ணக்கூடிய விகிதாச்சாரம் என்ன என்பதைக்கூட இன்னும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பிற தொழில்களையும் அங்கே துவங்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். சிவகங்கை மாவட்டம், மிகப் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியை முன்னேற்ற வேண்டுமென்றால் அந்த கிராபைட்டினுடைய உப தொழில்களை உடனடியாக அந்தப் பகுதியிலே ஏற்படுத்தித் தரவேண்டும். அதை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் தொழிற்சாலையில், அந்தச் சுரங்கத்தில் கிடைக்கக்கூடிய 14 விழுக்காடு கச்சா கிராபைட்டைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு சுமார் 200 மெட்ரிக் டன் அளவுள்ள கிராபைட்டை சுத்திகரிப்புச் செய்து, 28 மெட்ரிக் டன் அளவு, 85 விழுக்காடு முதல் 96 விழுக்காடு வரை பெற்று, இப்பொழுதுதான்–கடந்த கால ஆட்சியில் உள்ளதுபோல் இல்லாமல், இப்போது–இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல மேற்கொண்டு உப தொழிற்சாலைகளை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகளும், சந்தர்ப்பங்களும்

2004 பிப்ரவரி 5]

வசமாக இருந்தால் அதற்குண்டான முயற்சிகள் ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

14–

கால்நடை மருத்துவமனை

***20993**–**திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆளானந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒன்றியம், தண்டராம்பட்டு தொகுதியிலே, ஆளானந்தல் பகுதியிலே கால்நடை மருத்துவமனை துவக்கப்படுமா என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற்குறிப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆளானந்தல் பகுதியைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பகுதியிலே அண்டம்பள்ளம், மதுராம்பட்டு, தண்டரை, இசக்கிரிகாட்டேரி, கரிப்பூர் போன்ற கிராமப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, ஒரு கால்நடை மருத்துவமனையை அங்கே துவக்க வேண்டும். அளவுகோல், அதாவது விதி, ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்கு இடையிலே இருக்கிற இடைவெளியைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அரசாங்கம் துவக்குகிறதா, அல்லது அந்தப் பகுதியிலே இருக்கிற கால்நடைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கால்நடை மருத்துவமனைகளை அரசு துவக்குகிறதா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.